WLC15-1-1-TA

# தேவன் இருக்கிறாரா?: தேவன் இருக்கிறார் என்பதை பற்றிய விவாதம் - நிகழ்ச்சி 1

**அறிவிப்பாளர்:** அறிவிப்பாளர் : இன்றைய ஜான் அங்கேர்பெர்க் நிகழ்ச்சியில், தேவன் இருக்கிறாரா? சமீபத்திய ஆய்வறிக்கையின்படி அமெரிக்கர்களில் ஐந்தில் ஒருவர் தன்னை நாத்திகனாக, இறைநம்பிக்கை அற்றவராக ஒன்றிலும் பங்கில்லாதவராக கருதுவதாக கூறப்படுகிறது. ஒருவேளை நீங்கள் கூட கேட்கலாம், "தேவன் இருக்கிறாரா" தேவன் இருக்கிறார் என்பதற்கான தத்துவார்த்த ஆதாரம் அறிவியல் ஆதாரம் என்ன? இன்றைக்கு இந்த கேள்விகளுக்கு பதிலளிக்க இருக்கும் எனது விருந்தினர் ஆராய்ச்சி நிபுணர் தத்துவ மேதை Dr. வில்லியம் லேன் கிரேக் பலரும் அவரை தங்கள் தலைமுறையின் முன்னணி கிறிஸ்தவ சித்தாந்த மேதை என்று கருதுகின்றனர், உலகம் முழுவதிலும் உள்ள பிரசித்திபெற்ற பல்கலைகழகங்களில் நடக்கும் நாத்திகர்களுடனான விவாதங்களில் பங்குபெறுபவர். Dr. கிரேக் இங்கிலாந்தின் பர்மிங்காம் பல்கலைகழகத்தில் தத்துவ பாடபிரிவில் Ph. D பட்டம் பெற்றவர்; மேலும் முனிக் பல்கலைகழகத்தில் இறையிலில் டாக்டர் பட்டம் பெற்றிருக்கிறார். அவர் டல்போத் இறையியல் பள்ளியில் ஆராய்ச்சி

தத்துவ பேராசிரியராக பணியாற்றுகிறார். மேலும் resonablefaith.org யின் நிறுவனராக இருக்கிறார். Dr. கிரேக் இறையியல் மற்றும் சிந்தாந்த தத்துவத்தை பற்றி பல நூற்றுகணக்கான கட்டுரைகளையும் 30ற்கும் மேற்ப்பட்ட புத்தகங்களையும் தொகுத்து வழங்கியிருக்கிறார். அவருடைய புத்தகங்களில் பிரசித்திபெற்ற இரண்டு புத்தகங்கள் ரிசனபில் பெயித் மற்றும் ஆன் கார்ட். இன்றைக்கு ஒரு கேள்வியுடன் துவங்கிட இருக்கிறோம், "தேவன் இருக்கிறார் இல்லை என்பது எத்தகைய வித்தியாசத்தை உண்டாக்குகிறது?

**டாக்டர் வில்லியம் லேன் கிரேக்**:. ஜனங்கள் தங்கள் தோள்களை துலுக்கி கொண்டு கேட்கலாம், "தேவன் இருந்தாலும் இல்லாவிட்டாலும் அதில் என்ன பெரிய வித்தியாசம் உண்டாகப்போகிறது," அப்படி கேட்க்கிறவங்க இதுவரைக்கும் இந்த கேள்வியை ஆழமா யோசிக்கவில்லை என்றே நினைக்கிறேன். சொல்லபோனா நாத்திக தத்துவ வாதிகளான பிரெட் ரிச் நீட்ச்கீ, பேர்டிரான்ட் ரஸ்ஸல், ஜீன் பால் சார்ட்ரே போன்றவர்கள், தேவன் இருக்கிறார் என்ற காரியம் மனிதனுள்ளுள் வித்தியாசத்தை உண்டாக்குவதை ஒப்புகொள்கிறார்கள், ஒன்றாகவும் தனிப்பட்ட விதத்திலும் பல மாற்றங்கள் இருக்கிறது.

**அறிவிப்பாளர்**: தேவன் இருந்தாலும் இல்லாவிட்டாலும் அதில் என்ன வித்தியாசம் இருக்கிறது என்பதோடு, இரண்டாவதாக, தேவன்

இருக்கிறார் என்பதற்காக அடையாளத்தை பார்க்கலாம், தி ஜான் அங்கேர்பெர்கின் இந்த விசேஷித்த நிகழ்ச்சியை காண உங்களை அன்போடு அழைக்கிறோம்.

*****

**டாக்டர். ஜான் அன்கெர்பெர்க்:** நிகழ்சிக்கு உங்களை வரவேற்கிறோம், நான் ஜான் அன்கெர்பேர்க். இன்றைக்கு உங்களுக்காக சுவாரஸ்யமான நிகழ்ச்சியை தயாரித்திருக்கிறோம். எனது விருந்தினரான Dr. வில்லியம் லேன் கிரேக் நமது காலத்தின் சிறந்த தத்துவ மேதையாக இருக்கிறார். உலகின் சிறந்த விமர்சகர்கள் மத்தியில் நடைபெறும் விவாதங்களில் பங்குபெற்று அநேகருடன் உரையாடலில் ஈடுபட்டு வருவதோடு உலகின் தலைசிறந்த பிரசித்தி பெற்ற பல்கலைகழகங்களில் உரையாற்றி வருகிறார்.

மேலும் Dr. கிரேக், நீங்க இன்றைக்கு எங்களோடு இருப்பதில் பெரும் மகிழ்ச்சி அடைகிறோம். இன்றைக்கு ஒரு கேள்வியுடன் துவங்கிட விரும்புகிறேன் இன்றைக்கு இதை பார்த்துகொண்டிருக்கும் நேயர்கள் பலருக்குள் இந்த கேள்வி இருக்கலாம், அவர்கள் தங்களுக்குள்ளே கேட்டுகொண்டிருக்கிறார்கள்: தேவன் இருந்தாலும் இல்லாவிட்டாலும் அதில் பெரிய வித்தியாசம் என்ன இருக்கபோகிறது? அதில என்னதான் இருக்கு? தேவன் இருந்தாலும் இல்லாவிட்டாலும் தங்களுக்கு எந்த பிரட்சனையும் இல்லை என்ற பலர் நினைக்கிறார்கள். நீங்களோ

ஒருவரும் பதில் சொல்ல முடியாதபடி நிறுத்தும் கேள்வி தேவன் இருக்கிறாரா என்பதை பற்றிதான கேள்வி என்கிறீர்கள், அது ஏன்?

**கிரேக்**:..ஜனங்கள் தங்கள் தோள்களை துலுக்கி கொண்டு கேட்கலாம், “தேவன் இருந்தாலும் இல்லாவிட்டாலும் அதில் என்ன பெரிய வித்தியாசம் உண்டாகப்போகிறது,” அப்படி கேட்க்கிறவங்க இதுவரைக்கும் இந்த கேள்வியை ஆழமா யோசிக்கவில்லை என்றே நினைக்கிறேன். சொல்லபோனா நாத்திக தத்துவ வாதிகளான பிரெட் ரிச் நீட்ச்கீ, பேர்டிரான்ட் ரஸ்ஸல், ஜீன் பால் சார்ட்ரே  போன்றவர்கள், தேவன் இருக்கிறார் என்ற காரியம் மனிதனுள்ளுள் வித்தியாசத்தை உண்டாக்குவதை ஒப்புகொள்கிறார்கள், ஒன்றாகவும் தனிப்பட்ட விதத்திலும் பல மாற்றங்கள் இருக்கிறது. அதாவது, தேவன் ஒருவர் இல்லாவிட்டால், மனிதர்கள் எல்லாரும் வெறும் உயிரியல் ஜீவராசிகளாக இருந்திருப்பார்கள், மற்ற உயிரியல் தாவரங்கள் உயிரினங்கள் போல, திடீரென்று எல்லாம் தனித்தனியாகவோ ஒன்றாகவோ மாண்டுவிடும்.

ஆகவேதான் நாம் அனைவரும் ஒரு பிடிமானத்தை பெற்றுகொள்ளவேண்டியது அவசியம் அதாவது இறையியல் மேதை பால் டில்லிக் கூறுகிறார் “இல்லாமையின் அச்சுறுத்தல்” அதாவது என்னன்னா, நா இருக்கிறேன் என்று எனக்கு தெரிந்திருந்தும் - உயிரோட இருக்கேன், ஜீவனிருக்கு - ஆனா ஒருநாள் மரித்திடுவேன்

என்று தெரியும். நான் முற்றிலுமாக இல்லாமல் போயிடுவேன். நா இருக்க மாட்டேன். அது ஒரு அச்சத்தை உண்டாக்குவதாக இருக்கிறது.

சிறுவனாக இருந்தபோது எனது தகப்பனார் என்னிடம் ஒருநாளில் நாம் மரிக்க வேண்டும் என்று சொன்னது எனக்கு நினைவிருக்கிறது, அதை கேட்டதும் என்னால் ஏற்றுகொள்ள முடியாமல் இருந்தது. எனக்குள்ள தாங்க முடியாத வேதனையும் பயமும் உண்டானது. எப்படியோ, ஒரு சிறுவனாக, எனக்குள்ள அந்த எண்ணம் ஒருநாள் நான் இல்லாமல் போவேன், நான் மரித்திடுவேன், என்ற எண்ணம் என்னை பிடித்துகொண்டது. காலப்போக்கில் நிச்சயம் நடக்கும் என்ற எண்ணத்தோடு வாழ கற்றுகொண்டேன். எல்லாரும் அப்படிதான்.

ஆனா ஜீன் பால் சார்ட்ரே வின் உட்கருத்து உண்மையென நான் நினைக்கிறேன்: நீங்க நித்தியத்தை இழந்துவிட்டால் அது சிலமணி நேரமாக இருந்தாலும் பல வருடங்களாக இருந்தாலும் சரி அது வித்தியாசத்தை உண்டாக்குவதில்லை. தேவன் இல்லை என்றால், அழிவில்லாமல் இருப்போம் என்ற நம்பிக்கையை நாம் இழந்து நிற்க்கிறவர்களாக இருப்போம். எண்ணக்கூடிய நாட்கள் மட்டுமே நமக்கு இருந்திடும். எனவே, தனிப்பட்ட விதத்தில் நாம் ஒவ்வொருவரும், கல்லறையோடு வாழ்க்கையின் முடிவை அடைந்திடுவோம். மேலும் இது தனிப்பட்ட ஒரு நபருக்கு மட்டும் பொருந்துவதில்லை, மொத்த முனுக்குலத்திற்கும் ஏற்ப்புடையதாக காணப்படும்.

விஞ்ஞானிகள் இந்த பிரபஞ்சம் விரிந்துகொண்டே இருக்கிறது என்கின்றனர். அப்படி இருப்பதால், அது இன்னும் அதிகமாக குளிர்ந்த நிலையை அடைந்துகொண்டிருக்கும். அப்படியிருந்தால் வெளிச்சத்திற்கு இடமே இல்லாமல் போகும். வெப்பம் இல்லாமல் இருக்கும், அப்படியானால் ஜீவன் இல்லாமல் போகும். வான் வெளியில் பறந்து விரிந்துகொண்டிருக்கும் பிரபஞ்சத்தின் எல்லையற்ற கரும்படலங்களில் உயிரற்ற நட்சத்திரங்களும் பால் வழி திரள்களின் கூட்டமும் மிதந்துகொண்டிருக்க வேண்டும். தேவன் இல்லை என்று சொல்வோமானால், மனிதன் ஜீவ ஆட்துமாவாக இருக்க முடியாது, அது மட்டுமல்ல ஒவ்வொருவரும் தனிப்பட்ட விதத்தில் ஜீவனை இழந்தவர்களாக காணப்படுவோம். அதன் விளைவு: இதன காரணமாக வாழ்க்கையே அர்த்தமற்றதாக மாறிவிடும். நாம் வாழ்கிற வாழ்க்கைக்கும் எந்த வித அர்த்தமும் மதிப்பும் நோக்கமும் இல்லாமல் இருக்கும்.

**ஆன்கர்பெர்க்:** சரி, அர்த்தத்தை பற்றி கொஞ்சம் சொல்லுங்கள். எதனால இப்படி சொல்கிறோம், தேவன் இல்லை என்போமானால், நம்முடைய வாழ்க்கை ஏன் அர்த்தமற்றதாக ஆகிறது?

**கிரேக்**:...அர்த்தம் என்றால், ஒரு அடையாளத்தோடு இருப்பது: ஏதாவது அர்த்தம் இருக்கிறதா. தேவன் இல்லை என்று சொன்னால், உங்களுடைய வாழ்க்கைக்கு எந்த வித அடையாளமும் இல்லை. நாம

என்ன செய்கிறோம் நம்மால் பிறப்பிக்கப்படுகிற செயல்களுக்கு மதிப்பே இல்லாமல் இருக்கும். சரி, ஒருவர் இப்படி கேட்கலாம், “இந்த நபர் சரித்திரத்தில் பெரிய தாக்கத்தை உண்டாக்கினாரே, அல்லது இவர் மற்றவர்கள் வாழ்வில் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறார்.” ஆனா அது எல்லாமே அவருடைய வாழ்வோடு தொடர்புடைய அடையாளத்தை காட்டுகிறது. அதுதான் அவர் என்று சொல்லப்படவில்லை. அதாவது, மனிதன் இந்த பிரபஞ்சத்தின் வெப்ப தாக்கத்தால் நிச்சயம் அழிவை கண்டடைந்திடுவான். அதனால நீங்க என்ன செய்தாலும் எப்படி இருந்தாலும் அது ஒரு பொருட்டாக இல்லாமல் இருக்கும், ஏன்னா எல்லாவற்றிற்கும் முடிவு ஒன்று போல தான் இருக்கும். அதனால, மனிதர்களின் அறிவாற்றலை மேம்படுத்தும் அறிவியல் வல்லுனர்களின் செயல்களும், இந்த உலகத்தில் சமாதானத்தை நிலைபடுத்த முயலுபவர்களும், மனிதனுடைய வலி வேதனையை மாற்ற நினைக்கும் மருத்துவர்களின் முயற்சியும், எல்லாமே பிரயோஜனமற்றதாக ஒன்றுமே இல்லாதது போல இருக்கும். இறுதியில் அது எந்த வித வித்தியாசத்தையும் உண்டாக்காதது போலதான் இருக்கும். சரி, ஆகவே, தேவன் இல்லை என்றால், நிச்சயம், நம்முடைய வாழ்க்கை அர்த்தமற்றதாக அடையாளம் இல்லாததாக தான் இருக்கும்.

**ஆன்கர்பெர்க்:** நீங்களும் சொல்லியிருக்கீங்க தேவன் இல்லை என்றால், வாழ்க்கைக்கு எந்த மதிப்பும் இருக்காது. விளக்கிடுங்கள்.

**கிரேக்**:..மதிப்பு என்று சொல்லும்போது நன்மை தீமை, சரி தவறு என்பதாகும். இங்க என்ன சொல்லப்படுகிறது என்றால் நன்மை தீமை இதுதான் சரியான தரமான நிலை இது தவறு என்று எடுத்துரைக்கும் தேவன் இல்லை என்றால், நிலையான தரமான நிலை கடமைகள் என்று ஒன்றுமே இருக்காது. நாத்திகர்களின் கண்ணோட்டத்தில், அதிகப்படியான மதிப்புகள் தற்ச்செயலாக பரிணாம வளர்ச்சியினாலும் சமூகத்தின் நிலைகளாலும் உண்டானதாக கருதுகின்றனர். ஆனால் தில் எந்த வித நன்மை தீமை என்ற நிலைகள் கிடையாது. பிரெஞ்சு ஆராய்ச்சியாலரான ஜீன் பால் சார்ட்ரே இப்படி சொல்கிறார், நம்முடைய வாழ்நாளை குறித்த உப்பு சப்பில்லாத மதிப்புகளை மேம்படுத்தி பார்த்துகொண்டிருக்கிறோம், நீ செய்வது சரி நான் செய்வது தவறு என்று சொல்லக்கூடிய ஒருவரும் இல்லை என்கிறார்.

**ஆன்கர்பெர்க்:** ஆமா. நீங்க சொல்லியிருக்கீங்க, வாழ்க்கை கல்லறையில் முடிந்துவிட்டால், நீங்க ஸ்டாலினை போலவோ அன்னை தெரேசா போலவோ இருப்பதில் எந்த வித்தியாசமும் இருக்காது. அதை விளக்கிடுங்கள்.

**கிரேக்**:..சரி, அதாவது, தேவன் இல்லை என்றால், அழியாமை என்ற நம்பிக்கை இல்லாமல் இருக்கும். நாம் எப்படி வாழ்கிறோம் என்பதற்கான எந்தவித நீதி நியாயங்களும் இல்லாமல் இருக்கும். நாத்திகர்களுக்கு சில நீதியான நிலை தரம் மதிப்பு இருந்தாலும், அது

வெறுமையான நிலையில் இருக்கும், ஏன்னா ஸ்டாலினுக்கும் அன்னை தேரேசாவுக்கும் முடிவு ஒன்றுபோல்தான இருந்தது; இந்த பிரபஞ்சத்தின் மரணம் என்ற நிலையை அடைந்தார்களே.

**ஆன்கர்பெர்க்:** சரி, சிறந்த உதாரணத்தை வைத்திருக்கிறீர்கள், நீங்க சீர்கெட்ட வாழ்க்கையில் இருந்தாலும், உங்களுக்கு தேவன் தேவைபடுவார். அறிவியல் சம்பந்தமான உதாரணத்தை வைத்திருக்கிறீர்கள். அதை பற்றி சொல்லுங்க.

**கிரேக்**:..சரி, சிறுவனாக இருந்த போது ஒரு அறிவியல் கதையை வாசித்திருக்கிறேன் ஒரு விண்வெளியாளர் தனி ஆளாக வான் வெளியில் உள்ள ஒரு ஆஸ்டிராடை அடைகிறார். அவரிடம் இரண்டு கலசங்கள் இருந்தது. ஒன்றில் விஷம் வைத்திருந்தார், மற்றொன்றில் அழியா வாழ்வை வைத்திருந்தார். அவருடைய நிலை பார்த்த அவர், வெறுத்துபோய் வான் வெளிகளில் ஒரு பாறையை அடைந்து, தற்கொலை செய்துகொள்ள முடிவு செய்தார். அவர் அந்த விஷம் இருக்கும் கலசத்தை குடிக்க நினைத்தார். மேலும், அவர் தெரியாமல், தான் தவறான கலசத்தை பருகிவிட்டதை அவர் உணர்கிறார் - அவர் அழிவில்லாத ஜீவனின் கலசத்தை குடித்ததால் வாழும் சாபத்தை பெற்றார், அர்த்தமற்ற, மதிப்பற்ற, முடிவேயில்லாத வாழ்க்கை. அதனால நம்முடைய வாழ்க்கை அர்த்தமுள்ளதாக மதிப்புள்ளதாக

நோக்கம் நிறைந்ததாக இருக்க அழியாமை மட்டும் அவசியமில்லை. நமக்கு தேவனும் அழியாமை அவசியமாகும்.

**ஆன்கர்பெர்க்:** சரி, இந்த பிரச்சனை மோசமாகிக்கொண்டே இருப்பதாக சொல்கிறீர்கள், ஏன்னா தேவன் இல்லாவிட்டால் எது சரி எது தவறு என்று சொல்வதற்கு வழியில்லாமல் போகும். நீதியான நிலை என்று இருக்காது.

**கிரேக்**:..ஆமா. தேவன் இல்லாமல் சரி தவறு இது நல்லது இது கேட்டது என்ற எந்தவிதமான தரமும் இருக்காது. எல்லாமே சுமூகமான தொடர்புடையவைகளாக இருந்திடும். யாருடைய மதிப்பு சரியென்று சொல்லவும் யாருடைய நிலை தவறு என்று சொல்லவும் யாருமே கிடையாது இங்க அப்படிதான் இருந்திருக்கும், எது நல்லது எது கேட்டது என்ற நிலை இருந்திருக்காது.

**ஆன்கர்பெர்க்:** அது நமது இன்றைய கலாசாரத்தை விவரிக்கிறது, அப்படிதானே?

**கிரேக்**:..அப்படி நான் நினைக்கல, ஜான், நம்முடைய கலாசாரம் தொடர்ப்புகளை கொண்டிருக்கிறது; ஆனா பலருடைய கருத்து இப்படிதான் இருக்கிறது. நான் என்ன நினைக்கிறேன் என்றால் புதிய தரமான ஒரு நிலை உண்டாகியிருக்கிறது: அதாவது தனி நபருடைய தன்மைகளின் தரங்கள் கானபப்டுகிறது, பொறுத்துகொள்ளும் நிலை, மற்றவர்களின் கண்ணோட்டத்தை ஏற்றுகொள்ளும் நிலைகள். இது

எல்லாமே தொடர்புடையதாக இருப்பதை குறிக்கிறது, இருந்தாலும், இந்த மற்ற காரியங்களை ஒப்புகொள்வதற்கு பாரம்பரியமான சில நிலைகளை உண்மையாகவே நிராகரிக்க வேண்டியிருக்கிறது.

**ஆன்கர்பெர்க்:** அதோடு தேவன் இல்லாவிட்டால் வாழ்விற்கு ஒரு நோக்கம் இருக்காது என்கிறீர்கள். அதற்கு என்ன அர்த்தம்?

**கிரேக்**:..நோக்கம் என்று சொன்னால் இலக்குகள், காரணங்கள், இது இருப்பதற்கான நோக்கம். தேவன் இல்லை என்று சொன்னால், இந்த பிரபஞ்சத்திற்கோ அல்லது மனிதனுடைய வாழ்க்கைக்கோ எந்த நோக்கமும் இருக்காது. நாம் இயற்கையினால் தற்செயலாக உண்டாக்கப்பட்டவைகளாக இருப்போம், எந்தவித காரணமும் இல்லாமல் இங்கு இருப்பவர்கள் போல இருந்திடுவோம், அதனால் இந்த பிரபஞ்சத்தின் வெப்ப தாக்கத்தால் மாண்டு போகிறவர்களாக இருந்திடுவோம். அதனால நாத்திகத்தில், நீங்க வாழ்வதற்கும், இந்த பிரபஞ்சம் உண்டாயிருப்பதற்கும், எந்த காரணமும் இல்லை, எந்த நோக்கமும் சொல்லப்படவில்லை.

ஒரு சிறுவனாக ஒரு நாவல் படித்தது நினைவிருக்கிறது H.G. வெல்ஸ் சின் தி டைம் மெஷின் இதை மிக அழகாக விவரித்திருக்கிறார். அந்த நாவலில், வெல்ஸ் சின் காலத்தை கணக்கிடும் நிலை எதிர்காலத்திற்குள் கடந்து போய் மனிதனுடைய இறுதி நிலையை கண்டறிவதாக இருக்கும். அவர் என்ன கண்டு பிடிக்கிறார் என்றால்

செத்து போன பூமி பெரிய சிகப்பு சூரியனை சுற்றி கொண்டிருக்குமாம். அங்கு ஜீவன் இல்லை, மனிதர்கள் யாருமில்லை, விவசாயங்கள் இல்லை. எல்லாமே ஒன்றுமில்லாமல் போகிறது.

அந்த நாவலை வாசித்த போது, நான் நினைத்தேன், "இல்ல, இல்லை, இது முடிவாக இருக்க முடியாது!" ஆனா தேவன் இல்லாத பிரபஞ்சத்தில் இது சாத்தியமாக இருக்கலாம். எந்தவித நோக்கமும் இல்லை; அப்படிதான் முடிவு இருக்கும், அது எப்படியிருந்தாலும் சரி. அந்த கதையில் மேலும், வெல்ஸ்சின் கால கணிப்பு கருவி திரும்பி வருகிறது; எதற்காக வருகிறது? முதல்ல சொன்னது போல எந்தவித நோக்கமும் இழக்கும் இல்லாத நிலைக்கு திரும்புகிறது.
உண்மையாகவே, தேவன் இல்லை என்றால், மனிதர்கள் தாங்கள் ஒரு குருட்டாட்டமான நிலையில் இருப்பதை நிச்சயம் உணர்ந்திடுவார்கள். வாழ்க்கைக்கும் எந்தவிதமான அடையாளமும் இருக்காது, அர்த்தமில்லை, மதிப்பு நோக்கமில்லை.

**ஆன்கர்பெர்க்:** ஆல்ரைட், சில நாத்திகர்கள் தேவன் இல்லாமல் மனுஷன் அர்த்தமுள்ள வாழ்க்கையை சந்தோஷத்தோடு வாழ முடியும் என்கின்றனர். நீங்க ஒரு நாத்திகருக்கு தொடர்ந்து தங்கள் கண்ணோட்டத்தின்படி சந்தோஷமாக வாழ்வது சாத்தியமல்ல என்று சொல்கிறீர்கள்.

**கிரேக்:**..சரி. வாழ்க்கை அர்த்தமற்றதாக மதிப்பில்லாமல் நோக்கம் இல்லாமல் இருப்பதை உணரும்போதும் நிச்சயம் உங்களால் மனரம்யமாக சந்தோஷமாக வாழ முடியும் என்பது சாத்தியமல்ல. நாத்திகர்கள் எப்படி சந்தோஷமாக வாழ்கிறார்கள் என்றால் எந்தவித முன்னேற்றமும் இல்லாத மற்றவர்களின் உலக கண்ணோட்டத்தை பிடித்துகொண்டிருக்கிரார்கள். ஆனா அவங்க தங்கள் வாழ்வில் எந்தவித முன்னேற்றமும் இல்லாமல் அர்த்தமற்ற நிலையில் மதிப்பில்லாமல், நோக்கம் இல்லாமல், இருந்தால் பெரிய பாதிப்பிற்கு ஆளாவார்கள். இதுதான் மனிதனுக்கு அடிப்படையாக இருக்கும் சிக்கலாக காணப்படுகிறதென்று நினைக்கிறேன். தொடர் முன்னேற்றத்தோடு சந்தோஷமாக வாழ இந்த உலக கண்ணோட்டம் எப்படி வழிவகுக்கிறது என்று நீங்கள் நினைக்கிறீர்கள்? நாத்திகம் அந்த கண்ணோட்டத்தை எடுத்துக்கொள்வதில்லை.

**ஆன்கர்பெர்க்:** சரி, இதை செயல்படுத்திய இன்றைய கடந்த காலத்தில் வாழ்ந்த நாத்திகர்களை வைத்து பல உதாரணங்களை எடுத்து சொல்லியிருக்கிறீர்கள். அவர்கள் திருப்தியில்லாத வாழ்க்கை வாழ்ந்திருக்கிறார்கள்.

**கிரேக்:**..சரி. இப்ப, உதாரணமாக, வாழ்வில் அர்த்தம் உண்டாகும் நிலையை எடுத்து கொள்வோம். நாத்திகர்களும் தேவன் இல்லாமல் வாழ்வில் எந்த நோக்கமும் இல்லை என்பதை ஒப்புகொள்கிறார்கள்,

அவர்களுடைய வாழ்க்கை அர்த்தமுள்ளதாக தான் இருக்கிறது என்ற கருத்தோடு வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். உதாரணமாக, ஜீன் பால் சார்ட்ரே கூறுகிறார் ஒரு சில செயல்களை செய்வதன் மூலம் ஒருவர் தனது வாழ்விற்கு அர்த்தத்தை கொடுத்திட முடியுமாம். சார்ட்ரேயும் மார்க்சிசத்தை தெரிந்துகொள்கிறார். சரி, அது ஏற்றுகொள்ள முடியாதது போல இருக்கலாம். நா ஏதோவொன்றை செய்வதால் இந்த பிரபஞ்சம் ஒரு அர்த்தத்தை உடையாதாக இருக்கும் என்று சொல்ல முடியாது. இதை புரிந்துகொள்வது சுலபம் என நினைக்கிறேன். நீங்க இந்த பிரபஞ்சத்திற்கு ஒரு அர்த்தம் கொடுக்கலாம் நா வேறொரு அர்த்தத்தை கொடுக்கலாம். யாருடையது சரி? சரி, இரண்டில் ஒன்றுதான் சரி என்பது பதில். அப்படியிருந்தாலும் பிரபஞ்சத்திற்கான அர்த்தம் இல்லாமல் தான் இருக்கும், அது நாம எப்படி செயல்படுகிறோம் என்பதை சார்ந்த ஒன்று அல்ல. எனவே சார்ட்ரே என்ன சொல்கிறார் என்று நினைக்கிறேன் என்றால், “நம்முடைய வாழ்க்கைக்கு அர்த்தம் இருப்பது போல நடத்திடலாம் என்கிறார்.” அது உங்களை நீங்களே முட்டாள் ஆக்குவதாகும்.

**ஆன்கர்பெர்க்:** ஆமா. நாம மதிப்பு உண்டாகுதல் என்ற பிரச்சனையை பார்க்கும்போது  எதனால, இதில் மிகப்பெரிய தவறுகள் செய்யப்படுகிறது என்கிறோம்?

கிரேக்:..ஆமா. இந்த மதிப்புகள் தரம் என்ற நிலைதான் மிகவும் நிலையற்ற ஒன்றாக காணப்படுகிறது, ஏன்னா ஒரு நாத்திகர் தன்னுடைய வாழ்வில் எந்தவிதமான நீதியான நிலைகளும் தரங்களும் கடமைகளும் இல்லாமல் வாழ்வது சாத்தியமல்ல. உதாரணமாக, பிரைட் ரிச்  நீட்ச்கீ, 19ம் நூற்றாண்டின் சிறந்த நாத்திகர், தனது குருத்துவரிடமிருந்து விலகினார், ரிச்சர்ட் வாக்னர், அவர் முன்னாள் ஜெர்மானிய ஆன்டி செமிடிசம் ஸ்டீட்ரண்ட் ஜெர்மன் நேசனாளிசத்தின் ஒருங்கிணைப்பாளர். அதைப்போலவே, ஜீன் பால் சார்ட்ரே, இரண்டாம் உலகபோருக்கு பிற்ப்பாடு எழுதிய காரியங்களில், யூதர்களையும் மற்ற ஜனங்களையும்  முற்றிலும் நிக்கிரகம் பண்ணும்படியான இந்த உபதேசம் ஏதோ தன்னிச்சையாக உண்டான செயல் அல்ல, மாறாக இது உண்மையில் எதிர்ப்பார்க்க முடியாது தவிர்க்க முடியாத குற்றமாகும் என்று சொல்லுகிறார். பெர்டிரன்ட் ரஸ்ஸல் தன்னுடைய சொந்த கருத்துக்களை தன்னால் ஏற்றுகொள்ள முடியவில்லை என்கிறார்.  அவர் வெளிப்படியாக பேசும் சமூக விமர்சகர்; யுத்தங்களை முன்மொழிந்து பேசுவார் பாலியல் சுதந்திரத்திரத்தின் வரையறைகளை சொல்லுவார். ரிச்சரட் டாக்கின்ஸ் போன்றவர்களும் அச்சமின்றி நீதிநெறியை கூறுகிறவர்கள். டாக்கின்ஸ் தேவனில்லை என்றும் நன்மை இல்லை தீமை இல்லை என்று சொன்னாலும், வித்தியாசம் என்று ஒன்றுமே இல்லை என்றாலும், இப்படி சொன்னாலும், அவருடைய புத்தகங்களில் அவர் ஓரின சேக்கை போன்ற பாலியில்

காரியங்களை கண்டித்து எழுதியிருக்கிறார், சிறுவர்களுக்குள் மதவாத தன்மையை புகுத்துவதை பற்றியும், மனிதனை பலிகொடுக்கும் செயல்களையும் கண்டித்திருக்கிறார். இவை எல்லாமே சீரற்ற நிலைகள் தான். இவை அனைத்தும் ஒருவர் எந்தவித நீதிநெரியான வழிகள் தரமான நிலை இல்லாமல் சந்தோஷமாக வாழ முடியாது என்பதை காண்பிக்கிறது.

**ஆன்கர்பெர்க்:** சரி, அதையும் எடுத்து கொள்ளலாம், அதை நீதியான நிலை என்பதில் சேர்த்திடலாம். இங்க நம்மிடம் நாத்திகர்கள் கூறும் இந்த நிலையான தன்மைகளை பற்றிய கருத்துகள் இருக்கிறது, அவை சீரற்ற நிலையில் இருக்கின்றன. தேவனில்லாமல் வாழ்வது கல்லறைக்கு நேரான விளைவுகளை கொண்டிருக்கிறது. ஒருமுறை நீங்கள் BBC யின் கருத்துகணிப்பை பார்த்துகொண்டிருந்தீர்கள். அதை பற்றி சொல்லுங்கள்.

கிரேக்:..இந்த BBC ஆவணப்படத்தில், ஆஷ்விட்ச் உயிர்பிழைப்பாளர்களின் நேர்க்காணல் நடந்தது. அதில் செவிலியர் ஒருவர் மகப்பேறு மருத்துவராகும் படி வற்புறுத்தப்பட்டார். அவள் ஒன்றை கண்டறிந்தால், அங்கிருந்த மென்ஜெளி என்ற மருத்துவர், கர்ப்பமாக இருந்த பெண்களை ஒரு அடுக்குகள் உள்ள அறைக்குள் வைத்தார்களாம். கொஞ்ச நாட்களும் பிறகு, இந்த பெண்களில் ஒருவரையும் இவள் பார்க்காததால் விசாரித்திருக்கிறாள்: அந்த

அடுக்குகளில் இருந்த பெண்களுக்கு என்ன நடத்தது? அப்போது அவள் கேள்விப்பட்ட காரியம், “ஓ, நீ அதை கேள்விப்படளையா? டாக்டர் மென்ஜெளி அவர்களுக்கு அறுவை சிகிச்சை செய்தார். “அவர் உயிரோடு அவர்களை அறுத்திருக்கிறார். எந்தவிதமான நீதிநெரியான நிலைகள் இல்லையென்றால், இந்த செயல் தவறானது என்று சொல்ல வாய்ப்பில்லாமல் இருக்கும். ஆஸ்விட்ச்சில் சிறைபிடிக்கப்பட்டிருந்த ஒரு ரபிஇடம் நேர்க்காணல் நடத்தப்பட்டது அவர் அங்கே எல்லா நீதியான காரியங்களும் தலை கீழாக இருப்பதாக சொன்னார். நீ கொலை செய்யலாம், நீ பொய் சொல்லலாம், நீ திருடலாம். மனுஷன் அந்த மாதிரி ஒரு நரகத்தை பார்க்க முடியாது. இருந்தாலும், உண்மையை சொன்னால், தேவன் இல்லை என்றால், நம்முடைய உலகம் ஆஸ்விட்ச் போலதான் இருக்கும். எந்த நன்மையையும் இல்லை தீமையும் இல்லை. சரி தவறு என்று இல்லை. எந்த வித மதிப்பும் தரமும் இல்லாத ஒரு வாழ்க்கைதான் இருக்கும். இந்த மாதிரியான உலக கண்ணோட்டத்தை வைத்துகொண்டு எந்த நாத்திகரும் சீரான வாழ்க்கை வாழ்வது கடினமாகும்.

**ஆன்கர்பெர்க்:** சரி, எனக்கு இது ஆச்சரியமா இருந்தது ஒரு மருத்துவர், L. D. ரியு, 1991ல் அமெரிக்க அகேடமியில் அறிவியல் முன்னேற்றத்தை பற்றி எடுத்துரைத்தார், அது யதார்த்தமான பொய் என்று நாம் கருதுகிறதுபோல இருந்தது.அதை பற்றி சொல்லுங்கள்.

**கிரேக்**:..சரி. பேராசிரியர் ரூ என்ன சொல்கிறார் என்றால் நமது சமூதாயத்தில் சமூக சீர்க்கேட்டை அனுமதிக்க முடியாது. ஆனால், இன்னொரு பக்கம் பார்த்தால், ஜனங்களுக்குள் நீதியான நிலையை உட்புகுத்த நினைத்து செயல்படும் காரியங்கள் பிரயோஜனமற்றமாக மாறிவருகிறது. இந்த நிலையில் இருந்து நாம் எப்படி வெளிவர முடியும்? நமக்கு ஒரு "வெள்ளை பொய்" அவசியமாயிருக்கிறது என்கிறார் ஏன்னா அறிவாற்றல் உள்ளவர்கள் ஜனங்களை முற்றிலும் வஞ்சிக்கிறார்கள் இதுதான் உண்மையான நீதியான நிலை, இதுதான் உண்மையான அர்த்தம், இதுதான் இதன் நோக்கம், என்கின்றனர் ஆனா அது உண்மை அல்ல. அதனால ரூ சொல்கிறார் நம்மை நாமே இந்த வெள்ளை பொய்களை நம்பும்படி செய்து மனுக்குலமும் சமுதாயமும் முன்னோக்கி செல்லும்படி செய்திடலாம் என்று கருதுகிறார். அவர் இறுதியாக சொன்ன காரியம் இதுதான். அதாவது இந்த மாதிரியான பொய்களை சொல்லாமல் நம்மால் வாழ முடியாது என்றார். நவீன கால மனிதர்களுக்கு சொல்லப்பட்ட வேதனையான கூற்றாக இது கருதப்படுகிறது. அதாவது சந்தோஷமாக சீரான வாழ்க்கை வாழ, ஒருவன் தன்னையே வஞ்சித்துகொள்ள வேண்டுமாம்.

**ஆன்கர்பெர்க்:** சரி, ஆல்ரைட், நல்ல செய்தியை பார்க்கலாமா. நவீன கால மனிதன் என்ற உலகத்தின் கண்ணோட்டத்திற்கு வேதாகம கிறிஸ்தவம் எப்படி சவாலிடுகிறது?

**கிரேக்**:...அதாவது நாத்திகத்தின் வாழமுடியாத நிலை என்ற ஒளியில், பார்க்கும் போது, ஜான், நாம மறுபடியும் அந்த சதுரத்திற்குள் நின்று சொல்லணும், “ஒரு நிமிடம் பொறு. தேவன் இல்லை என்று நமக்கு எப்படி தெரியும்? தேவன் இல்லை என்றால், எந்தவிதமான அர்த்தமும் இருக்காது, வாழ்வில் மதிப்பும் நோக்கமும் இல்லாமல் இருக்குமே. அப்படின்னா  என்னுடைய கருத்துப்படி தேவன் இருக்கிறார் என்பதற்கும் கிறிஸ்துவத்தின் சத்தியங்களுக்கும் புதிய ஆதாரங்களை ஆராய்ந்து பார்க்கும்படி செய்திடும் என நினைக்கிறேன்.  ஏன்னா தேவன் இருக்கிறார் என்பதற்கு நல்ல காரணங்கள் இருந்தால், அது நம்மால் சீரான வாழ்க்கையை சந்தோஷமாக வாழ முடியும் என்பதற்கு ஒரு ஊன்றுகோலாக இருந்திடுமே.

**ஆன்கர்பெர்க்:** பில், நீங்கதா சொன்னீங்க “வேதாகம கிறிஸ்தவம் அர்த்தமுள்ள மதிப்புள்ள நோக்கம் நிறைந்த வாழ்விற்கு இரண்டு நிபந்தனைகளை கூறுகிறது: தேவன் மற்றும் அழியாமை.” அதை விளக்கிடுங்கள்.

**கிரேக்**:...அதுதான் சரியானது, ஜான். வேதாகம கிறிஸ்துவத்தில், தேவன் இருக்கிறார் நமது வாழ்க்கை கல்லறையோடு முடிவு பெறவில்லை என்று சொல்லப்படுகிறது. நமது வாழ்வின் அர்த்தம் நித்தியமாக இருக்கும் தேவனுக்கும் நமக்கும் இடையிலான உறவின் அடிப்படையில் அமைத்திருக்கிறது என்பதை தெரிந்துகொள்கிறோம்.

வாழ்வின் தரங்கள் மதிப்புகள் எல்லாம் தேவனுடைய சுபாவத்தில் வேர் கொண்டிருக்கிறது, அவருடைய சுபாவம் அன்பானவர், நீதியும், இரக்கமும், உதாரத்துவமும், உண்மையும் ஆனவர், அதனால் நாம் நீதியான நிலையையும் நமது கடமைகளையும் பதிப்பிட முடியும். இறுதியாக நம்முடைய வாழ்விற்கு ஒரு அர்த்தம் இருக்கிறது. தேவன் நம்மை தமக்கென்று சிருஷ்டித்திருக்கிறார். நம்முடைய முடிவு தேவனை அறிகிற அறிவில் அடங்கியிருக்கிறது. அதுதான் மனுக்குலத்தின் முடிவிற்கு ஒரு நிறைவை அளிக்கிறது, தேவனையும் அவருடைய அன்பையும் நித்தியமாக அறிந்துகொள்ளுதல். எனவே நாத்திகர்களை போல அல்ல, வேதாகம கிறிஸ்தவத்தின் படி சீரான சந்தோஷமான வாழ்விற்கு சில நிபந்தனைகள் இருக்கிறது - தேவன் மற்றும் அழிவில்லா வாழ்வு - நமக்கு அர்த்தத்தையும் மதிப்பையும் நோக்கத்தையும் தருகிறது.

**ஆன்கர்பெர்க்:** சரி. இது உங்களுக்கு ஓராண்டு பாடமல்ல. நீங்க பேசுகிற காரியங்களை அனுபவித்து இருக்கிறீர்கள். நீங்க கிறிஸ்தவராக இல்லாத நாட்களுக்கு எங்களை கொண்டு செல்லுங்கள் அப்ப நீங்க இந்த காரியங்களை பற்றி யோசித்திருக்கிறீர்கள்.

**கிரேக்**:..சரி. நான் கிறிஸ்தவ குடும்பத்தில் வளர்க்கப்பட வில்லை, ஆனா எங்க குடும்பம் நீதிநெறிகளுடைய அன்பான குடும்பம். ஆனா எனக்கு நா சொல்லபோகிற பிரெஞ்ச் தத்துவ மேதைகளின் கூற்ற

உங்களுக்கு வாசித்து காட்ட போகிற அந்த நிலையில் தான் சோகத்தில் இருளடைந்த நிலையில் இருந்தேன். என்னுடைய வாழ்க்கையை என் ஜீவியத்தை நான் பார்த்த போது, நா நினைத்தேன், என்னுடைய வாழ்க்கைக்கு எந்த வித அர்த்தமும் இல்லையே? எல்லாமே தானாக அப்படியே தோன்றியது போல எனக்கு தோன்றினது, அதனால என்னுடைய ஜீவியத்திற்கு எந்த அர்த்தமும் நோக்கமும் இல்லாதது போல இருந்தது ஏதாவது அர்த்தம் இருக்கிறதா என்று தேடினேன். இந்த விஷயம் எனக்கு சோர்வையும் இருளடைந்த நிலையையும் உண்டாக்கியது. அது எப்படி இருந்திருக்கும் என்று உங்களால் புரிந்துகொள்ள முடிகிறதா என்று எனக்கு தெரியவில்லை, ஆனா அது என்னை இக்கட்டான நிலைக்கு தள்ளியது. ஒவ்வொருநாளும் பெரிய மலைபோல் இருந்தது.

ஒரு நாள் எனக்கு நல்லா ஞாபகம் இருக்குது கூனிக்குறுகி இருந்தேன். என்னுடைய உயர் நிலை பள்ளியில் ஜெர்மன் வகுப்பிற்குள் சென்றேன், உள்ள போய் ஒரு பெண்ணின் அருகில் நான் உட்கார்ந்தேன் அவளோ உங்களுக்கு கோபம் உண்டாகும்படி செய்கிற எப்போதும் சிரித்துகொண்டே சந்தோஷமாக இருப்பவர்கள் போல இருப்பாள். அவளுடைய தோளை தட்டி அவளிடம் கேட்டேன், “உன்னை எப்போதும் சந்தோஷமாக இருக்க செய்வது என்னது?” அதற்கு அவ சொன்னா, “அது என்னன்னா நா இயேசு கிறிஸ்துவை என் சொந்த இரட்சகராக ஏற்றுகொண்டிருக்கிறேன் என்றாள்.” அதற்கு நா கேட்டேன்,

“சரி, நானும் சபைக்கு போரேன்னே.” அதற்கு அவ சொன்னா, “அது மட்டும் போதாது, பில். அவர் உன்னுடைய இருதயத்தில் வாழ்கிற அந்த அனுபவம் உனக்கு வேண்டும் என்றாள்.” அதற்கு நான் கேட்டேன், “சரி, எதற்காக அவர் அப்படி ஒரு காரியத்தை செய்யணும் என்றேன்.” அதற்கு அவள், அவர் உன்னை நேசிக்கிறார் பில், என்றாள்.”

அது பல கற்கள் என் மீது மோதியது போல் இருந்தது. இதோ இருக்கிறேன், அதிக கோபமும் விரக்தியும் நிறைந்திருக்கிறது, உன்னை நேசிக்கிற ஒருவர் இருக்கிறார் என்று அவ சொன்னா. அவர் யார் அவர்தான் இந்த பிரபஞ்சத்தின் தேவனானவர்! அந்த எண்ணம் என்னை அசைத்தது. இந்த பிரபஞ்சத்தின் தேவன் என்னை நேசிக்க முடியுமா என்ற எண்ணம், இந்த புழுவை பின்ற பில் கிரேக் பூமியின் தூளில் இருக்கிற தூசியை போன்றவனை நேசிக்கிறாரா.

அன்று இரவு நா வீட்டிற்கு போனதும் புதிய ஏற்ப்பாட்டை எடுத்தேன் அதை எனக்கு கிதியோன் வேதாக சங்கத்தினர் ஐந்தாவது படிக்கும்போது எங்க ஸ்கூலுக்கு வந்து கொடுத்தாங்க, அதை வாசிகக் துவங்கினேன். நா சுவிசேஷங்களை வாசிக்க துவங்கியதும், நசரேயனாகிய இயேசுவினால் நான் மிகவும் கவரப்பட துவங்கினேன். இதுவரைக்கும் நா கேட்டிராத விதமான ஞான போதனைகளை இந்த நபர் சொல்கிறாரே, அவருடைய யதார்த்தமான வாழ்க்கை முறையை ஒருபோதும் மறுக்கவே முடியாது.

சரி, சுருக்கமாக சொல்ல விரும்புகிறேன், அதுவரை இல்லாத அளவு ஆறு மாதங்களாக என் ஆத்துமாவிற்கு ஒரு விடையை தேடி அலைந்து கொண்டிருந்தேன், இறுதியாக என்னுடைய உதவி கயிற்றை பிடித்துகொண்டேன். ஒரு இரவில் தேவனிடத்தில் கதறி அழுதேன், எனக்குள் இருந்த எல்லா கோபத்தையும் விரக்தியையும் அவரிடத்தில் முழுவதுமாக நான் ஊற்றிவிட்டேன். அதை செய்த பிறகு எனக்குள்ள ஒரு பலூன் ஊதி வெடிக்கிற அளவிற்கு காற்று நிரம்பியிருப்பது போல சந்தோஷத்தினால் நிறைந்து இருப்பதை உணர்ந்தேன். வெளியில ஓடி போனேன். அது மத்திய மேற்கு பகுதியின் மென்மையான கோடை கால மாலைவேளை, அங்க பால்திரளை இந்த வட்டத்தில் இருந்து அந்த வட்டம் வரை விரிந்திருப்பது போல இருக்கும். மேலே இருந்த நட்சத்திரங்களை பார்த்து நான் நினைத்தேன், தேவன்! தேவனை நான் அறிட்ன்க்கொண்டேன்! அந்த நொடி என்னுடைய வாழ்க்கையை மாற்றியது. மனுக்குலத்தோடு இந்த நற்ச்செய்தியை பகிர்ந்துகொள்ளும் சிறந்த செயலை செய்வதை விட வேறு எந்த விஷயமும் என் வாழ்வை பூரணப்படுத்தாது என்பதை நான் புரிந்துகொண்டேன். ஏன்னா இதுதான் சத்தியம் என்றால், இதுதான் உண்மை என்றால், இதுதான் பிரசங்கிக்கப்படவேண்டிய முக்கியமான செய்தியாகும்.

**ஆன்கர்பெர்க்:** நேயர்களே, இதுதான் சத்தியம், நீங்க தொடர்ந்து இந்த செய்திதொடரை கேட்ப்பீர்கள் என நம்புகிறோம். அடுத்த வாரம்

தேவன் இருக்கிறார் என்பதை நம்புவதற்கான ஐந்து காரணங்களை பார்க்க இருக்கிறோம். நீங்கள் தவறாமல் பார்ப்பீர்கள் என நம்புகிறேன்.

*****

எங்களுடைய தொலைக்காட்சி நிகழ்சிகளை காண

இலவச ஜான் அன்கெர்பெர்க் நிகழ்ச்சி ஆப்பை பதிவிறக்கம்

செய்திடுங்கள்.

இயேசு கிறிஸ்துவை ஏற்றுகொள்வதற்கான ஜெபம் @JAshow.org

@2015 A.T.R.I.